







# பொது இடங்களில் புகைபிடிக்கத் தடை


## விளக்கக் கையேடு




SmokefreeChennai

புகையில்லா சென்னை








40 அடி தூரம் வரை உள்ளவர்களைக்
கொல்லும் கொடிய ஆயுதம்



Capable of killing anyone within a 40-ft. radius

# சிகரெட்டில் இருப்பது என்ன?

## சிகரெட், பீடி புகையில் 4000 நச்சு இரசாயனங்கள் உள்ளன. அவற்றில் சில...



இந்தியாவில்
சிகரெட் மற்றும் புகையிலைப் பொருட்களால்
ஒவ்வொரு ஆண்டும் **10 லட்சம்** பேர் சாகிறார்கள்.
அதாவது
ஒவ்வொரு நாளும் **2500** பேருக்கும் மேல்!

உலக அளவில்
சிகரெட், பீடி புகைப்பதாலும்,
புகையிலைப் பொருட்களாலும்
ஆண்டுதோறும் உயிரிழப்போர் **54 லட்சம்** பேர்.

இப்போது புகைபிடிக்கும் இரண்டு பேரில் ஒருவரை
அந்தப் புகையே கொன்றுவிடும்.

இக்கொடிய பழக்கத்தை உடனே தடுக்காவிட்டால்
இந்த நூற்றாண்டில்
புகைப்பழக்கத்தால் **100 கோடி** பேர்
உரிய வயதாகும் முன்பே இறந்துவிடுவார்கள்.

புகையால் இறப்பவர்களில் கணிசமானோர்
புகைபிடிக்காதவர்களாக இருப்பார்கள்!


# புகைபிடித்தல் புகைக்காதவரைக் கொலை செய்யும்!




- புகைபிடிப்பவருக்கு அருகில் நின்றால், சிகரெட், பீடி புகையின் கொடிய பாதிப்புகள் புகைபிடிக்காதவருக்கும் ஏற்படும்.
- புகைபிடித்தவர் வெளிவிடும் புகையில் 4000 நச்சு வேதிப்பொருட்கள் உள்ளன. இவற்றால் ஐம்பது வகையான புற்றுநோய் தாக்கும்.
- புகைபிடிப்பவர் வெளிவிடும் புகையில் 85% புகை கண்ணுக்குத் தெரியாது. புகை நாற்றமும் அடிக்காது. கண்களுக்குத் தெரியாமலேயே நுரையீரலுக்குள் நுழைந்துவிடும்.
- புகைபிடித்தவர் அந்த இடத்தைவிட்டு சென்ற பிறகும் புகை அங்கேயே இருக்கும். அது அங்கு வரும் புகைபிடிக்காதவரையும் பாதிக்கும்.

# அடுத்தவர் வெளிவிடும் புகையை சுவாசிப்பதால் புகைபிடிக்காதவருக்கு ஏற்படும் நோய்கள்

## DISEASES CAUSED BY SECOND-HAND SMOKE




* Evidence of causation: suggestive
Evidence of causation: sufficient



# தூயக் காற்று - ஒரு அடிப்படை உரிமை

நல்ல ஆரோக்கியமான உடல் நலத்துடன் உயிர் வாழ்வதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. பொது இடத்தில் புகைபிடிக்கும் செயல் இந்த அடிப்படை உரிமைக்கு எதிரானதாகும்.

பொது இடத்திலோ அடுத்தவர் அருகிலோ புகைபிடிப்பது இந்திய அரசியல் சாசனம் வகுத்துள்ள நெறிமுறைகளுக்கு எதிரான செயலாகும்.

## இந்திய அரசியல் சாசனம் கூறுவது என்ன?



பிரிவு 29 : ஒரு நபரின் உயிரையோ, தனிமனித சுதந்திரத்தையோ பறித்தல் கூடாது.

பிரிவு 39 (உ) : தொழிலாளர்களின் உடல் நலத்தையும், திறத்தையும் பாதுகாப்பதற்கும், ஆண், பெண், இளம் குழந்தைகள் ஆகியோரை தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதற்கும் உரிய கொள்கைகளை அரசு பின்பற்றுதல் வேண்டும்.

பிரிவு 47 : மக்களது ஊட்டச்சத்து அளவினை உயர்த்துதல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை அரசாங்கம் தனது தலையாயக் கடமையாகக் கருத வேண்டும்.

## புகைப்பவருக்கு புகைபிடிக்க உரிமை இல்லையா?

புகைபிடிப்பவர் புகைபிடிப்பதற்கு உரிமை உண்டு. ஆனால் அடுத்தவர் அருகிலோ, அடுத்தவரை பாதிக்கும் வகையிலோ புகைபிடிப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை!

புகைபிடிப்பதற்கு இந்தியாவில் தடை எதுவும் விதிக்கப்படவில்லை. ஆனால் "எந்தெந்த இடங்களில் எல்லாம் புகைபிடிக்கக் கூடாது" என்கிற தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, புகைபிடிப்பவர்கள் தடை செய்யப்பட்ட இடங்களில் புகைபிடிப்பதை கைவிடவேண்டும். அதுவே பொறுப்புள்ள மனிதரின் அடையாளமாகும். நல்ல மனிதற்கு அழகு – சட்டத்தை மதித்தல்.

# பொது இடத்தில் புகைபிடிப்பது தண்டனைக்குரிய குற்றம்

## சட்டம் சொல்வது என்ன?

இந்திய அரசின் புகையிலைக் கட்டுப்பாட்டுச் சங்கம் (COTPA 2003) பிரிவு 4–ன் கீழ் நாடு முழுவதற்கும் பொது இடங்களிலும், பணி இடங்களிலும் புகைபிடிக்க கட்டாயத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (இந்திய அரசின் அரசாணை எண். GSR(E) 417, நாள் : 30-05-2009)

இந்த உத்தரவின்படி :

- அனைத்து பொது இடங்கள் மற்றும் பணி இடங்களில் புகைபிடிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.
- அலுவலகம், உணவகம், கடை, திரையரங்கம், தேநீர் விடுதி, பேருந்து நிலையம் போன்ற அனைத்து 'மூடப்பட்ட' பொது இடங்களில் எந்த ஒரு நபரும் அடுத்தவர் புகையால் பாதிக்காத வண்ணம் பொதுமக்களை பாதுகாப்பது இச்சட்டத்தின் நோக்கம்.

### பொது இடம் என்பது எது?

மக்கள் வந்து செல்லக்கூடிய அனைத்து இடங்களும் பொது இடம்தான் என்கிறது சட்டம். இதில் தனியார் இடங்களும் அடங்கும். ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பணியாளர்கள் வேலை செய்யக்கூடிய அனைத்து தனியார் இடங்களும் இச்சட்டத்தின்படி பொது இடங்கள்தான். அதாவது, வீட்டுக்கு வெளியே உள்ள அனைத்து 'மூடப்பட்ட' இடங்களும் பொது இடங்கள்தான்.

மூடப்பட்ட இடம் என்பது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சுவரோ, மேற்கூரையோ உடைய இடம் ஆகும். இத்தகைய இடங்களுக்கு முன்பு உள்ள திறந்த வெளியும்கூட புகைபிடிக்கத் தடை செய்யப்பட்ட இடம்தான்.

### திறந்தவெளிகளில் புகைபிடிக்கலாமா?

மக்கள் அதிகம் வந்து செல்லக்கூடிய திறந்தவெளிகளான பேருந்து நிறுத்தம், பூங்கா, விளையாட்டுத் திடல், கடற்கரை போன்ற இடங்களிலும் புகைபிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**இது புகைபிடிப்பவர்களுக்கு எதிரான சட்டம் அல்ல...**
**தடைசெய்யப்பட்ட இடங்களில் புகைபிடிப்பதற்கு எதிரானதே ஆகும்.**

## புகைபிடிக்கத் தடைவிதிக்கப்பட்ட இடங்கள் எவை?

பொது மக்கள் நுழைய அனுமதி உள்ள அனைத்து இடங்களிலும் புகைபிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. வீட்டுக்கு வெளியே, மக்கள் வந்து செல்லும் அனைத்து கட்டடப் பகுதிகளும் புகைபிடிக்கத் தடை செய்யப்பட்ட பகுதிகள்தான். புகைபிடிப்போர் தமது வீடு தவிர தலைக்கு மேல் கூரை உள்ள அல்லது மூடப்பட்ட எந்த ஒரு இடத்திலும் புகைபிடிக்கக் கூடாது. திறந்தவெளிகளில், பேருந்து நிலையம், தொடர்வண்டி நிலையம், விளையாட்டுத் திடல் ஆகியவற்றில் புகைபிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## இந்திய அரசின் உத்தரவுப்படி புகைபிடிக்கத் தடை செய்யப்பட்ட இடங்கள்

- உணவு விடுதிகள்
- தங்கும் விடுதிகள்
- திரையரங்கங்கள்
- மருத்துவமனைகள்
- கல்வி நிறுவனங்கள்
- திருமண மண்டபங்கள்
- கூட்ட அரங்கங்கள்
- நூலகங்கள்
- விளையாட்டு அரங்கங்கள்
- வணிக நிறுவனங்கள்
- கடைகள்
- மனமகிழ் மன்றங்கள்
- தேநீர் விடுதிகள்
- பார்கள்
- நீதிமன்ற வளாகங்கள்
- அரசு அலுவலகங்கள்
- தொடர்வண்டி நிலையங்கள்
- பேருந்து நிலையங்கள்
- தனியார் நிறுவனங்கள்
- தனியார் தொழிற்சாலைகள்

**மேலும்... பொது மக்கள் வந்து செல்லும் அனைத்து இடங்களிலும் புகைபிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.**



## புகைப்பிடிக்கத் தடைவிதிக்கப்பட்ட இடத்தின் பொறுப்பாளரின் கடமை என்ன?

உணவகம், தங்கும் விடுதி, தேநீர் விடுதி, அலுவலகம், திரையரங்கம், கல்வி நிலையம், வியாபார நிறுவனம், தொழிற்சாலை உள்ளிட்ட எந்த ஒரு இடத்திலும், அந்த இடத்தின் பொறுப்பாளராக உள்ளவர் கீழ்க்கண்டவற்றை செய்ய வேண்டும் என்பது சட்டமாகும்.

### 1. தடை செய்யும் அறிவிப்புப் பலகை வைக்க வேண்டும்.

பொறுப்பாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள இடத்தின் நுழைவாயிலிலும், உள்ளேயும் புகைபிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளதை அறிவுறுத்தும் அறிவிப்புப் பலகை வைக்க வேண்டும். இப்பலகை கீழே உள்ளவாறு அமைக்க வேண்டும்.

அகலம் 30 செண்டிமீட்டர்



**புகைபிடிக்கத் தடை செய்யப்பட்ட பகுதி**

**இங்கே புகைபிடித்தல் தண்டனைக்குரிய குற்றம்!**

நீளம் 60 செண்டிமீட்டர்

### 2. பொறுப்பாளர் அறிவிப்புப் பலகை.

யாரேனும் புகைபிடித்தால் அது குறித்து மற்றவர்கள் புகார் செய்வதற்கு ஏற்றவாறு வழிகாட்டும் அறிவிப்புப் பலகை ஒன்றினை வைக்க வேண்டும். அப்பலகை கீழே உள்ளவாறு அமையலாம். (இந்த பலகையில் மேலாளர், மேற்பார்வையாளர், உரிமையாளர் ஆகியோரின் யாரேனும் ஒருவரின் பெயரையும் தொலைபேசி எண்ணையும் குறிப்பிட வேண்டும்.

**இங்கே யாரேனும் புகைபிடித்தால்**
**தயவுசெய்து புகார் செய்யவும்!**

**புகார் செய்ய...**

பெயர்.............................................................................

தொலைபேசி எண்...............................................................

## 3. புகைபிடிக்க உதவும் வகையில் எந்தப் பொருளையும் வைக்கக் கூடாது.

உணவகம், தங்கும் விடுதி, தேநீர் விடுதி, அலுவலகங்கள் உள்ளிட்ட எந்த ஒரு பொது இடம், பணி இடம் எதிலும் - ஆஷ்டிரே, தீப்பெட்டி, லைட்டர் போன்ற புகைபிடிக்க உதவும் வகையில் எந்தப் பொருளும் இருக்கக் கூடாது.







## 4. யாரையும் புகைபிடிக்க அனுமதிக்கக் கூடாது

அரசு மற்றும் தனியார் இடத்தின் பொறுப்பாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள இடத்தில் யாரையும் புகைபிடிக்க அனுமதிக்கக் கூடாது.







# தண்டனை
# ரூ. 200

**பொது இடத்தில் புகைபிடித்தால்**
**புகைபிடிப்பவருக்கு அபராதம் ரூ. 200 உண்டு.**
**குற்ற வழக்கும் தொடரப்படும்**

**பொது இடத்தில் புகைபிடிப்போரை தடுக்கத் தவறினால் அந்த இடத்தின் உரிமையாளர், மேலாளருக்கும் தண்டனை உண்டு.**

**புகைபிடிப்போரின் எண்ணிக்கைக்கு தக்கபடி அபராதம் விதிக்கப்படும்**

5 பேர் புகைபிடித்தால் - 5 × 200 = மொத்தம் 1000 ரூபாய்

10 பேர் புகைபிடித்தால் - 10 × 200 = மொத்தம் 2000 ரூபாய்

என எத்தனை பேர் புகைபிடிக்கிறார்களோ, அதற்கேற்ப கூட்டுத் தொகை அபராதமாக விதிக்கப்படும்.
இந்த அபராதத் தொகையை உரிமையாளர் அல்லது அந்த இடத்தின் பொறுப்பாளர்கள் செலுத்த வேண்டும்.

# பொது இடங்களில் புகைபிடிப்பதை தடுக்கும் அதிகாரம் படைத்தவர் யார்?

பொது இடத்திலும், பணி இடத்திலும், சட்ட விதிகளை செயல்படுத்தவும் மீறுவோர் மீது அபராதம் விதிக்கவும் கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வர்களுக்கு சட்டப்படி அதிகாரம் உண்டு. இதற்கான அரசு ஆணை இந்திய அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

| பொது இடம் / பணி இடம் | சட்டப்படி அதிகாரம் படைத்தவர்கள் |
|---|---|
| அனைத்து பொது இடங்கள் | வருமான வரி ஆய்வாளர்கள், சுகாதார இயக்குநர்கள், மத்திய மாநில நிர்வாகத் தலைவர்கள், புகையிலைத் தடுப்பு இயக்கத்தின் அதிகாரிகள், காவல்துறை உதவி ஆய்வாளர் மற்றும் அதற்கு மேலான காவல்துறை அதிகாரிகள், மாநில உணவு மற்றும் மருந்துத்துறை அதிகாரிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மன்றத் தலைவர்கள், அலுவலர்கள், தேசிய ஊரக நலவாழ்வு இயக்கத்தின் மாவட்ட நலவாழ்வு சங்கம் திட்ட மேலாளர், நிதி மேலாளர் |
| கல்வி நிலையங்கள் | பள்ளி ஆய்வாளர்கள், மாவட்ட கல்வி அலுவலர், கல்வி நிலையத் தலைவர், தலைமை ஆசிரியர், ஆசிரியர் |
| மருத்துவமனைகள் | தலைமை மருத்துவ அதிகாரி, இயக்குநர், மருத்துவ அலுவலர்கள், பொது மருத்துவர்கள், மேற்பார்வையாளர்கள் |
| நூலகம் | நூலகர், உதவியாளர் |
| நீதிமன்றக் கட்டடங்கள் | பதிவாளர், துணை பதிவாளர், அரசு வழக்குரைஞர்கள் |
| அரசு அலுவலகம் | கெஸட்டட் அதிகாரிகள் |
| அஞ்சலகம் | தலைமை அஞ்சலக அதிகாரிகள் |

| பொது இடம் / பணி இடம் | சட்டப்படி அதிகாரம் படைத்தவர்கள் |
|---|---|
| தொடர்வண்டி நிலையம் | நிலைய அதிகாரிகள், பயணச்சீட்டு பரிசோதகர் மற்றும் இதர அதிகாரிகள் |
| பொதுக் கழிப்பிடங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் வசதிக்கான இடங்கள் | போக்குவரத்து கண்காணிப்பாளர்கள், உதவி கண்காணிப்பாளர்கள், பேருந்து நிலைய அதிகாரிகள், பயணச்சீட்டு பரிசோதகர்கள், பேருந்து நடத்துநர்கள் |

# தனியார் இடங்களில் புகைபிடிப்பதை தடுக்கும் அதிகாரம் படைத்தவர் யார்?

அனைத்து பொது இடங்கள் மற்றும் பணி இடங்களில் அவற்றின் பொறுப்பாளராக இருக்கும் மேலாளர், மேற்பார்வையாளர், உரிமையாளர் போன்று அந்த இடத்திற்கு யார் பொறுப்பான நபரோ, அவர் அங்கு புகைபிடிப்பதை தடுக்க சட்டபடி அதிகாரம் படைத்தவர் ஆவார். இது அவரது கடமையும்கூட.

எடுத்துக்காட்டாக, ஒரு திரையரங்கிற்குள் யாரும் புகைபிடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அந்த திரையரங்க மேலாளரின் பொறுப்பாகும்.

| பொது இடம் / பணி இடம் | சட்டப்படி அதிகாரம் படைத்தவர்கள் |
|---|---|
| தனியார் அலுவலகங்கள், உணவகம், திரையரங்கம், தொழிற்சாலை போன்ற தனியார் இடங்கள் | அந்த இடத்தின் தலைவர் அல்லது பொறுப்பாளர் (உரிமையாளர், மேலாளர், மேற்பார்வையாளர்) |

மேற்கண்ட அனைவருக்கும்,
இந்திய அரசின் நலவாழ்வுத் துறை அறிவிக்கை
GSR 417(E) நாள் 30-05-2008
மற்றும்
GSR 680(E) நாள் 15-09-2009
ஆகியவற்றின் கீழ் சட்டபடி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# பொது இடத்தில் புகைபிடிக்கத் தடை

## அறிய வேண்டிய உண்மைகள்

உடல் நலத்திற்கு உகந்தது.

பொது இடத்தில் புகைபிடிப்பதை தடுப்பதால் புகைபிடிப்பவர்கள் அன்றாடம் புகைக்கும் சிகரெட், பீடியின் எண்ணிக்கை குறைகிறது. புகை பழக்கத்தை நிறுத்தவும் உதவுகிறது.

கூடவே, புகைபிடிக்காதவர்கள், பெண்கள், குழந்தைகள் புகையின் கொடுமையான தீங்குகளிலிருந்து தப்புகின்றனர்.

மொத்தத்தில் பொது இடங்களிலும் பணி இடங்களிலும் புகைப்பதை தடுப்பதால் அனைவரது உடல்நலமும் பாதுகாக்கப்படுகிறது.

தொழிலாளர்களுக்கு நல்லது.

தேநீர் விடுதி, திரையரங்கம், தொழிற்சாலைகள் என அனைத்து இடங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்கள் புகையின் கேடுகளிலிருந்து தப்புகின்றனர். இதனால், தொழிலாளர் உடல்நலம் பாதுகாக்கப்படுகிறது.

பொதுமக்கள் வரவேற்கின்றனர்.

பொது இடங்களில் புகைபிடிக்க விதிக்கப்பட்ட தடையை பொதுமக்கள் ஏகமனதாக வரவேற்கின்றனர். புகைபிடிப்பவர்களே இத்தடைக்கு வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

சென்னையில் நடத்தப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பில் 99% பேர் பொது இடங்களில் புகைபிடிப்பதை முற்றிலுமாக தடுக்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.

தொழில் செய்வோருக்கு நல்லது.

பொது இடங்களில் புகைபிடிப்பதை தடுப்பதால் வியாபாரமோ தொழிலோ பாதிக்காது. இதனால் எவருடைய வருமானமும் குறையாது. பொது இடங்களில் புகைபிடிக்க தடை விதிக்கப்பட்ட நகரங்களில் செய்யப்பட்ட ஆய்வில் இது உறுதி யாக தெரிகிறது.

மாறாக, தொழிலாளர்களின் உடல்நலம் மேம்படுவதால் உற்பத்தித் திறன் அதிகமாகிறது என்பதே உண்மை.

SmokefreeChennai

# Protecting everyone's right to breathe clean air!

SMOKEFREE CHENNAI
No. 11, 6, Jay Nag Complex,
6th Cross Street,
United India Colony,
Kodambakkam,
Chennai - 600 024.
Phone : 044-2372 1594, 2372 1629
E-mail : sfc2010@gmail.com
Web : www.smokefreechennai.org